அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்

Provincial Department of Education - NWP

66 T I

# முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2018

# First Term Test - Grade 13 - 2018

சுட்டெண் : ......................

## உயிர் முறைமைகள் தொழினுட்பம் I
## Bio System Technology I

காலம் : 2 மணி

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக**
- **விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.**

**1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறிதது நிற்கும்**

01. வானிலை அவதானிப்பு நிலையமொன்றின் உபகரணங்கள் நிறுவுவது பற்றிய சரியான கூற்றானது.
1. காற்று வேமானி தரை மட்டத்திலிருந்து 12m உயரத்தில் நிறுவ வேண்டும்.
2. சூரிய ஒளிர்வு மானி தரைமட்டத்தில் கிழக்கு மேற்கு திசைவழியாக நிறுவ வேண்டும்.
3. எளிய மழைமானியின் மேல் மட்டம் தரைமட்டத்திலிருந்து 30 cm ல் இருக்க வேண்டும்.
4. அவதானிப்பு நிலயத்தின் வேலியிலிருந்து 5m தூரத்தில் எளிய மழைமானி நிறுவ வேண்டும்.
5. ஈரமானி, சூரிய ஒளிர்வுமானி, வெப்பமானி என்பன ஸ்டீவன்சனின் திரையினுள் அமைக்க வேண்டும்

02. உணவுப் பழுதடைதலில் தாக்கம் செலுத்தும் பௌதிக காரணி **அல்லாதது.**
1. காலம் 2. ஈரலிப்பு 3. நீர் சதவீதம் 4. pH பெறுமானம் 5. வெப்பநிலை

03. நீரின் தற்காலிக கடினத் தன்மை ஏற்படக் காரணம்
1. $CaSO_4$ உம் $MgSO_4$ உம்.
2. $Ca(HCO_3)_2$ உம் $Mg(HCO_3)_2$ உம்
3. $Mg(NO_3)_2$ உம் $Ca(NO_3)_2$ உம்
4. $Ca(NO_3)_2$ உம் $Mg(NO_3)_2$ உம்
5. $MgCl_2$ உம் $CaSO_4$ உம்

04. பெறுமதி சேர்க்கப்பட்ட கோழியிறைச்சி உற்பத்திகளுக்கு உதாரணங்களாவன
1. பதம் செய்த கோழியிறைச்சியும் புகையூட்டப்பட்ட கோழியிறைச்சியும்.
2. பதம் செய்த கோழியிறைச்சியும் சொசேஜசும்
3. புகையூட்டப்பட்ட இறைச்சியும், மீற்போல்சும்
4. பேகனும் பதம் செய்த இறைச்சியும்
5. சொசேஜசும், மீற்போல்சும்

05. உயிர் இரசாயன நற்காப்பு முறையின் விளைவானது
1. போத்தலில் அடைக்கப்பட்ட பால் 2. பதமாக்கப்பட்ட இறைச்சி 3. பாய்ச்சராக்கப்பட்ட பால்
4. சொசேஜஸ் 5. வினாகிரி

06. மண்ணிற்கு சேதனப் பொருட்கள் சேர்ப்பதால்
1. தோற்ற அடர்த்தி குறையும்
2. நீரைப் பற்றிவைக்கும் கொள்ளளவு குறையும்
3. இழையமைப்பு விருத்தியாகும்
4. தாவர வேர் பரம்பலுக்கான இடைவெளி குறையும்.
5. இறுக்கமடையும்.

07. உணவு ஒவ்வாமைக்காரணமாக அமையும் மீன்களில் காணப்படும் இரசாயனக் காரணி
1. புரோமலின் 2. ஹிஸ்டமின் 3. சயனைட்டு 4. ஹிஸ்டீன் 5. போன்லெக்

08. மண்ணின் கற்றயன் மாற்றீட்டுக் கொள்ளளவு அதிகரிப்பதில் பங்களிப்புச் செய்வது

A – களித்துணிக்கை B – அடையல் துணிக்கை C – நீர்த்துணிக்கை
D – உக்கல் துணிக்கை E – மணல் துணிக்கை

1. A, B மாத்திரம் 2. B, C மாத்திரம் 3. A, D மாத்திரம்
4. A, B, D மாத்திரம் 5. இவையாவும்

09. நவீனமயப்படுத்தப்பட்ட அகச்சூழல் நிலைமையின் கீழும் வெற்றிட பொதியிடல் முறையிலும் எப்போதும் உண்மையானது.

1. பொதியினுள் சிலிகாஜெல் உட்படுத்தப்படும்
2. அகச் சூழலின் வளியினளவு குறைக்கப்படும்
3. பொதியிடுதலுக்காக வாயுபரிமாற்றத்தடை ஊடகம் பயன்படுத்தப்படும்.
4. பொதியினுள் நைதரசன் வாயு நிரப்பப்படும்
5. பொதியினுள் உள்ள வாயுக்களின் சதவீதமானது உற்பத்தியின் ஆயுட்காலத்தை அதிகரிக்கும்.

10. நீரில் கரையும் ஒட்சிசனின் அளவு தொடர்பான கூற்றுக்கள் சில பின்வருமாறு

A – வெப்பநிலை அதிகரிக்கும்போது கரையும் ஒட்சிசனின் அளவு அதிகரிக்கும்.
B – நீரில் போசணைப்பதார்த்தங்கள் அதிகரிக்கும் போது அல்காக்களின் வளர்ச்சியால் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவு குறையும்.
C - கரைந்துள்ள ஒட்சிசனின் அளவு 3 – 5 ppm ஆகும் போது நீர்வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பாகும்.

இவற்றுள் உண்மையானது

1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. A, B மாத்திரம்
4. A, C மாத்திரம் 5. B, C மாத்திரம்

11. உயிர்முறைமைகளில் காலநிலை பராமாணங்கள் ஏற்படுத்தும் செல்வாக்கு தொடர்பான கூற்றுக்கள் சில பின்வருமாறு

A – முகிழ்கள் அதிகரித்தல் காரணமாக நெல் அறுவடை அதிகரிக்கும்.
B – சிவப்பு – நீல ஒளிகள் ஒளித்தொகுப்பில் செல்வாக்கு செலுத்தும்.
C - பகற்காலத்தின் நீளம் அதிகரிக்கும் போது கோழி முட்டை உற்பத்தி குறையும்

இவற்றுள் சரியான கூற்று

1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. A, B மாத்திரம்
4. A, C மாத்திரம் 5. A,B ,C அனைத்தும்

12. பாய்ச்சராக்கத்திற்கு பயன்படுத்தும் பாலில் காணப்படவேண்டிய அமிலத்தன்மையினளவானது

1. 0.21% ஐ விட குறைவாக 2. 0.22 - 0.30% வரையில்
3. 0.21% ஐ விட அதிகமாக 4. 0.30% ஐ விட குறைவாக
5. 0.28% ஐ விட குறைவாக

13. பண்புத் தரம் கூடிய மீனின் இயல்புகளாவன.

1. மீனின் உடலை வெளிப்புறமாக அழுத்தும போது நன்கு வழுக்கிச் செல்லும்
2. கண்கள் சிவப்பு நிறமாக காணப்படும்
3. கண்ணின் அடிப்பகுதி உட்சென்று காணப்படும்.
4. மீனின் பூ பிரகாசமான சிவப்பு நிறமாக் காணப்படும்
5. கண்ணின் மேற்பரப்பு நன்கு குவிந்து காணப்படும்.

14. A,B ஆகிய இரு புள்ளிகளுக்கிடையே இடைத்தூரத்தை அளக்கும் போது ஸ்டெடியா உபகரணத்தில் தென்பட்ட விதம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

இங்கு K = 100 C = 0 எனக் கொண்டு A,B க்கிடையே தூரத்தைக் காண்க.




1. 59.5 m
2. 34m
3. 25.5 m
4. 255m
5. 123.5 m

15. பாதுகாப்பான இல்லங்களில் ஒளி உத்தம அளவை விட குறையும் போது அதை சீர்படுத்துவதற்காக செய்யக் கூடியது,

1. அலும் வலை பயன்படுத்தல்
2. பாதுகாப்பு இல்லங்களுக்கு அண்மையில் நிழல் தாவரங்களை வளர்த்தல்
3. செடிகளை நெருக்கமாக வளர்த்தல்
4. வளி வெளித்தள்ளும் விசிரிகளை அமைத்தல்
5. LED மூலம் செயற்கை ஒளி வழங்குதல்

16. நான்கு சக்கர உழவு இயந்திரங்களில் வலுஊடு கடத்தும் தொகுதிக்குரிய பாகம் **அல்லாதது**

1. கடவுத் தொகுதி 2. விசையால் சில்லுகள் 3. கிளச்சு
4. கியர் பெட்டி 5. செலுத்தும் அச்சாணி

17. இலங்கைத் தர நிர்ணய நிறுவனத்தால் முடிவுப் பொருள்களுக்கு வழங்கப்படும் சான்றிதழானது

1. ISO 22000 2. ISSO 22000 3. HACCP 4. SLS 5. ISO 22001

18. பின்வரும் கூற்றக்களில் உண்மையானதை தெரிவு செய்க.

A - களித் தன்மையான மண்ணில் துணிக்கைகளின் மேற்பரப்பின் பரப்பளவும் நுண்ணுடுளைத் தன்மையும் அதிகமாகும்.

B - களித் தன்மையான மண்ணில் நீரைத் தேக்கி வைக்கும் கொள்ளளவு அதிகம்

1. A உண்மை B உண்மை
2. A உண்மை B பொய்
3. A பொய் B உண்மை
4. கூற்றுக்கள் இரண்டும் உண்மை A யினால் B விளக்கப்படுகிறது
5. கூற்றுக்கள் இரண்டும் உண்மை B யினால் A விளக்கப்படுகிறது

19. கொண்டு செல் பொதி ஒன்றில் படத்தில் காட்டப்பட்ட அடையாளம் வெளிப்படுத்துப்படுவது



1. உறுதி குறைந்தது என்பது
2. இலகுவாக உடையக்கூடியது
3. ஈரலிப்பால் உள்ளே உள்ள பொருள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது
4. மூடிக் கொண்டு செல்ல வேண்டுமென்பது
5. மழைக் காலத்தில் குடைபிடிக்கப்பட வேண்டுமென்பது.

20. கழிவு நீர் பரிகரிப்பு தொடர்பான கூற்றைத் தெரிவு செய்க

1. துணையான பரிகரிப்பின்போது பயன்டுத்தும் குளோரினின் செறிவு $1l$ லீற்றருக்கு 50mg – 80mg ஆகும்.
2. உயிர்ப்பாக்கப்பட்ட சேறு என்பது வளர்ச்சியடைந்த பற்றீரியாக குடித்தொகை நீரில் வீழ்படிவாகி அமுக்கத்திற்குள்ளாகுதல்
3. உயிர்ப் பரிகரிப்பிற்காக வடிகட்டித் தொகுதியையும் பயன்படுத்தலாம்
4. தொட்டிகளுக்குள் நீரை உட்செலுத்துவதற்கு முன் நடக்கும் செயற்பாடுகள் முதலாவது பரிகரிப்பாகும்.
5. முதலான பரிகரிப்பின் இறுதியில் திண்மக் கழிவுகளில் 60% அளவு குறையும்.

21. நெற்செய்கையில் பிரதான அறுவடைக்குப் பின்னரான செயலல்லாதது

1. அருவி வெட்டுதல் 2. சூடடித்தல் 3. அருவி வெட்டி காயவிடல்
4.. நெல்லை துப்புரவு செய்தல் 5. நெல் விதைத்தல்

22. வாயில் முட்டை அடைகாக்கும் மீனின்ங்களாவன

1. அவுராடஸ், யலோ பிரின்ஸ் 2. டெட்ரா, டிஸ்கஸ் 3. பைட்டர், அவராடஸ்
4. குராம், ஏன்ஜல்ஸ் 5. டெட்ரா, பைட்டர்ஸ்

23. இலங்கைத் தர நிர்ணய நிறவனத்தின் படி (SLS 959:1992) பெரிய முட்டை வகையின் நிறையானது

1. 58g – 68g இடைபட்டதாயிருத்தல் 2. 53g – 59g இடைபட்டதாயிருத்தல்
3. 43g – 52g இடைபட்டதாயிருத்தல் 4. 45g – 50g இடைபட்டதாயிருத்தல்
5. 49g – 52g இடைபட்டதாயிருத்தல்

24. சங்கிலி நில அளவையின் போது

1. கிடைத் தூரங்களும் கோணங்களும் அளக்கப்படும்.
2. காணியானது, முக்கோணங்களாகவும், சதுரங்களாகவும் பிரிக்கப்படும்
3. அதிக தரவுகள் உள்ள காணிகளுக்கு பொருத்தமானது
4. சங்கிலிக்குப் பதிலாக அளக்கும் நாடா பயன்படுத்தலாம்
5. களத்திலேயே படமாக்களும் நடைபெறும்.

25. இழைய வளர்ப்பின்போது தோற்றவடிப்பு வளர்ச்சிக்கான வளர்ப்பூடகத்தில் காணப்படவேண்டிய நிலைமையானது

1. ஒட்சின் மற்றும் சைட்டோகைன் விகிதமானது 1 ஐ விட அதிகம்
2. ஒட்சின் மற்றும் சைட்டோகைன் விகிதமானது 1 ஐ விட குறைவாகும்.
3. ஒட்சின் மற்றும் கிபரலின் சம விகிதத்தில் காணப்படும்.
4. ஒட்சின் மற்றும சைட்டோகைனின் சம விகிதத்தில் காணப்படும்
5. ஒட்சின் மற்றும் கிபரலின் விகிதம் 1 ஐ விட அதிகம்

26. நான்கு சக்கர உழவு இயந்திரத்தை இயக்கத தேவையான பொறிமுறை வலுவை உற்பத்தியாக்கப்படுவது

1. வலுச்சில்லினால் 2. கியர் பெட்டியால் 3. முடிவான செலுத்துகையால்
4. செலுத்தும அச்சாணி 5. எஞ்சினால்

27. பாலில் கொழுப்பல்லாத திண்மக் கூறுகளில் அடங்குவது

1. லக்டோஸ், சுக்குரோசு 2. கேசின், புரதம், கனிப்பொருள்
3. லக்டோஸ், கேசீன் - புதரம், கனிப்பொருள் 4. நீர், லக்டோஸ், கனிப்பொருள்
5. கேசின், லக்டோஸ்

28. அலூவியல் மண் தொடர்பான கூற்றக்கள் சில பின்வருமாறு

A. காடு வளர்ப்பிற்குகந்தது

B. களி அதிகமாகையால் செங்கல் கைத்தொழிலிற்கு பயன்படுத்தலாம்

C. நெற் செய்கைக்கு பொருத்தமானது

இக்கூற்றக்களில் உண்மையானது

1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. C மாத்திரம்
4. B, C மாத்திரம் 5. A,B, C அனைத்தும்

29. குளிர்த்தி உலர்த்தல், ஆள்குளிரூட்டல் என்பன தொடர்பான உண்மையான கூற்றானது.

1. குளிர்த்தி உலர்த்தலின் போது ஆள் குளிரூட்டப்பட்ட உணவிலுள்ள நீரானது பதாங்கமாக்கப்படும்.
2. பிளான்சிங் என்பது குளிர்த்தி உலர்த்தல் ஆள்குளிரூட்டல் ஆகிய நற்காப்பு செயற்றொடர்களின் இறுதிப்படியாகும்.
3. ஆள்குளிரூட்டல், குளிர்த்தி உலர்த்தல் என்பன இரண்டு இலாபகரமான நற்காப்பு முறைகளாகும்.
4. குறைந்த வெப்பநிலை நீண்டகால முறை என்பது அதிக காலம் பயன்படுத்தப்படும் நற்காப்பு உத்திகளாகும்.
5. குளர்த்தி உலர்த்தல் என்பது குளிர்ப் பிரதேச நாடுகளில் கையாளப்படும் பாரம்பரிய நற்காப்பு முறையாகும்.

30. வரம்பு மற்றும் சால் முறை பாத்தி அமைக்கத் தேவையான நிலப்பண்படுத்தல் உபகரணமானது

1. சாலிடு கருவி 2. சூழல் கலப்பை 3. முட்கலப்பை
4. முட்பற் கலப்பை 5. மண் வெட்டி

31.




காட்டப்பட்ட படத்தில் A, C க்கிடையிலான குத்துயர வேறுபாடானது.

1. 0.8 m 2. 0.85 m 3. 1.65 m 4. 100 m 5. 2.9 m

32. அலங்கார மீன் வளர்ப்பு தாங்கிகளில் நீரின் நிலைமைகள் தொடர்பான கூற்றுக்கள் சில பின்வருமாறு

A. தடாகத்தின் நாளாந்த pH வீச்சு 0.5ஐ விட குறையும் போது மீன்கள் இறந்து போலாம்.
B. நீரின் pH பெறுமானம் குறையும் போது பார உலோகங்களின் கரைதிறன் குறையும்.
C. மீன்களுக்கு அதிக தாக்கத்தை ஏற்டுத்துவது $NH_4^+$ செறிவை விட $NO_2^-$ செறிவாகும்.
D. சுயாதீன $NH_3$ மீன்களுக்கு நஞ்சல்ல

இவற்றுள் சரியானது

1. A ,B 2. B,C 3. A, C 4. A , D 5. B, D

33. இப்படத்தால் காட்டப்படுவது



1. வில்லொட்டு 2. தலைகீழ் ஆப்பொட்டு 3. சவுக்கு நாவொட்டு
4.. பக்கவொட்டு 5. முடியொட்டு

34. மண்ணின்றிய பயிர்ச் செய்கை ஊடகத்தில் பேணப்பட வேண்டிய pH மற்றும் EC வீச்சுக்களாவது.
1. 5.5 – 6.5 உம் 1.5 – 2.5 ds/m 2. 4.5 – 7.5 உம் 1.5 – 2.5 ds/m
3. 5.5 – 6.5 உம் 0.5 – 3.5 ds/m 4. 6.5 – 7 உம் 1.5 – 2.5 ds/m
5. 3.2 – 6.2 உம் 1.5 – 2.5 ds/m

35. 5m ஆழமான கிணற்றால் 12m உயரத்திற்கு நீரை உயர்த்த வேண்டும் எனின் பம்பியில் மொத்த நிலைத்த நிரலானது.
1. 20 m 2. 60 m 3. 7 m 4. 17 m 5. 12 m

36. இயற்கை மேற்பரப்பு நீர் முதலானது
1. குளம் 2. அணைக்கட்டு 3. விவசாயக் கிணறு 4. இடைமறிப்பு 5. அருவி

37. சம உயரக்கோடு தொடர்பான சரியான விடையைத் தெரிவு செய்க.

1. நெருக்கமான இரண்டு சமஉயரக் கோடுகளுக்கு இடையிலுள்ள சாய்வு பரவலான இடைவெளியைக் காட்டும்.
2. அதிக சாய்வுடைய மலை உச்சியில் சமவுயரக்கோடுகள் தூரமாகக் காணப்படும்.
3. U வடிவிலான சமவுயரக்கோட்டினால் பள்ளத்தாக்கு காட்டப்படும்.
4. சமவுயரக்கோடுகள் சந்திக்கின்ற இடத்தில் குத்தான மலை தோன்றும்
5. மலையடிவாரத்தின் சமவுயரக்கோடுகள் நெருக்கமாக காணப்படும்.

38. இலங்கையில் பரவலாக செய்கைப் பண்ணப்படும் சந்தை வாய்ப்பு அதிகமுள்ள அலங்கார நீர்த்தாவரமானது
1. Hydrilla, Bacopa, Vallisneria , Cabomba.
2. Sagittaria, Aponogeton , cryptocoryne.
3. Bacopa, Cabomba, Limnophila, cryptocoryne
4. Ludwigia, bacopa, sagittaria ,cryptocoryne
5. Hydrilla, Vallisneria, Cabomba,Aponogeton

39. உணவு சம்பந்தமான சட்ட திட்டங்கள் சில பின்வருமாறு
A. உணவுசம்பந்தமான சட்ட விதிமுறைகள் நடை முறைப்படுத்தப்படுவது 1981ம் ஆண்டின் 26வது சட்டத்திற்கமையவாகும்.
B. உணவு சட்ட விதிமுறைகளை செயற்படுத்தும் அதிகாரியானவர் விவசாய பணிப்பாளர் நாயகமாகும்.
C. இச் சட்டங்களால் உணவு விற்பனைக்காக கையாளுதல், தயார் செய்தல், களஞ்சியப்படுத்தல் ஆகிய சகல செயல்களும் உள்வாங்கப்பட்டுள்ளன.

இவற்றுள் சரியானது /சரியானவை.

1. A,B,C அனைத்தும் 2. A மாத்திரம் 3. B மாத்திரம்
4. C மாத்திரம் 5. B and C மாத்திரம்

40. கற்கல், முடகள் கொண்ட நிலத்தின் முதற் பண்படுத்தலுக்காக மிகவும் பொருத்தமான கலப்பையானது.
1. அச்சுத் தகட்டுக் கலப்பை 2. வட்டத்தட்டுக் கலப்பை 3. முட்கலப்பை
4. சூழல் கலப்பை 5. முட்பற் கலப்பை

41. நுண் நீர்ப்பாசனை தொகுதிகள் தொடர்பான கூற்றுக்கள் சில பின்வருமாறு
A. நீர்ப் பம்பியின் அமுக்கம் சீரானதாக பேணப்படவேண்டும்.
B. நீரை எடுத்துச் செல்லும் பிரதான குழாய் மண்ணிற்குள் புதைக்கப்பட்டிருக்க வேண்டும்.
C. பயிர்களுக்க நீரை வழங்க அதிக சக்தியுள்ள PVC குழாய்கள் பயன்படுத்த வேண்டும்.
D. பயிர் நீர்த் தேவைக்கேற்ப நீர் வெளியேற்றப்பட வேண்டும்.
இவற்றுள் உண்மையான கூற்றானது
1. A,B, C மாத்திரம் 2. A,B, D மாத்திரம் 3. B,C, D மாத்திரம்
4. A, D மாத்திரம் 5. A,C, D மாத்திரம்

42. தளபீட நில அளவை முறையொன்றானது
1. சுவடு வைத்தல் 2. EDM முறை 3. இடைவெட்டு முறை
4. சங்கிலி அளவை முறை 5. ஸ்டெடியா முறை

43. வரண்ட பிரதேச நாடுகளின் பாதுகாப்பில்லங்களில் பயிர்ச்செய்கையால் பெறப்படும் நன்மைகள் சில பின்வருமாறு
A. இழிவு மட்டத்தில் பீடை குடித்தொகையை பேணல்
B. பண்புத் தரமுள்ள அறுவடையைப் பெறல்
C. வரண்ட பிரதேசத்துக்குரிய சகல பயிர் வகைகளுக்கம் பயன்படுத்தக் கூடியதாயிருத்தல்
இவற்றுள் சரியானது /சரியானவை.
1. A, B மாத்திரம் 2. A,C மாத்திரம் 3. B, C மாத்திரம்
4. A,B,C அனைத்தும் 5. C மாத்திரம்

44. முசல வகை (Piston) பம்பியின் அனுகூலமானது
1. அடிக்கடி வால்வுகளை பரிசோதிக்கவும், திருத்தவும் வேண்டும்.
2. நீர் வெளித்தள்ளலில் உயரம் செல்வாக்கு செலுத்தாது
3. வெளித்தள்ளலின்போது அடிப்பு தன்மை உண்டாகும்.
4. அடையல் கொண்ட நீரையும் பம்பலாம்
5. சிறிய இடத்தினுள் நிறுவிக் கொள்ளலாம்

45. இலங்கையில் மென்மையான அரிமரம் பெறுவதற்காக பயிரிடப்படும் தாவரமானது
1. கிளிசடீடியா 2. பிஹிம்பிய 3. மகோகனி 4. வேம்பு 5.மருதை

46. அரிமரத்தின் வைரம் தொடர்பான உண்மையான கூற்றானது.
1. இளநிறமானது 2. நீண்ட காலம் பயன்படாது 3. உயிரற்ற இழையமாகும்.
4. பூச்சித் தாக்கம் அதிகம் 5. தண்டின் வெளிப்புறத்தில் அமைந்திருக்கும்.

47. பெயரளவு தூரம் 30m ஐக் கொண்ட அளவ நாடாவினால் இரு புள்ளிகளுக்கிடையில் தூரத்தை அளக்கும் போது வாசிப்பு 260m ஆக பெறப்பட்டது. இழுபடுதலின் போது அளக்கும் நாடா 10cm நீளத்தால் அதிகரித்தது என பின்னர் தெரியவந்தது. இரு புள்ளிகளுக்கிடையேயான உண்மையான தூரமானது (m)ல்
1. 260.86 m 2. 259.13 m 3. 263.00 m 4. 262.59 m 5. 258.86 m

48. பீடை நாசினிகள் விசிறும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமானது.
1. காற்று வீசும் திசைக்கு சமாந்தரமான திசையில் விசிற வேண்டும்.
2. காற்றின் திசைக்கு செங்குத்தான திசையில் விசிற வேண்டும்.
3. மத்தியான நேரத்தில் விசிற வேண்டும்
4. காற்றின் திசைக்கு எதிரான திசையில் விசிற வேண்டும்
5. காற்று வீசும் திசையில் விசிற வேண்டும்.

49. பால் சேகரிக்கும் நிலையங்களில் மேற்கொள்ளப்படும் சோதனைகள் சில பின்வருமாறு

A. தன்னீர்ப்பைச் சோதித்தல்

B. பாலிலுள்ள கொழுப்பு சதவீதத்தை சோதித்தல்

C. காய்ச்சும் போது கட்டியதலை சோதித்தல்

D. Resazurin சோதனை

இவற்றில் செலுமையான (புதிய) பாலின் அமைப்பை சோதிப்பதற்கு மேற்கொள்ளும் சோதனைகளானது.

1. A, B 2. B ,C 3. A,C , D 4. A,B, C 5. B,C, D

50. நுண் நீர்ப்சான தொகுதியொன்றை திட்டமிடும் போது பிரதானமாக கவனத்தில் கொள்ள வேண்டியது

1. தொகுதியின் துணைக் கூறுகளை
2. தொகுதியின் விசாலம்
3. நீர்ப்பாசன திட்டம்
4. பயன்படுத்தும் நீர் முதல்
5. பம்பி தொழிற்படும் சக்தி முதல்

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் Provincial Department of Education NWP

**வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்**

**Provincial Department of Education - NWP**

**66 T II**

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2018

**First Term Test - Grade 13 - 2018**

சுட்டெண் : ......................

உயிர் முறைமைகள் தொழினுட்பம் II
Bio System Technology II

காலம் : 3 மணி

- **A பகுதிக்கு இத்தாளிலேயே விடையளிக்கவும்.**

## A பகுதி - அமைப்புக் கட்டுரை

01). A. i. வானிலை அவதானிப்பு நிலையமொன்றிலுள்ள படத்தில் காட்டப்பட்ட கட்டமைப்பை பெயரிடுக.



..................................................................................................................

ii. இக் கட்டமைப்புக்குள் நிறுவப்படும் உபகரணங்கள் 3 ஐக் குறிப்பிடுக.

1. ..................................................................................................................
2. ..................................................................................................................
3. ..................................................................................................................

iii. இக்கட்டமைப்பிற்கு சூரிய கதிர்ப்பால் ஏற்படக் கூடிய பாதிப்பை இழிவாக்க மேற்கொண்டுள்ள நுட்பமுறை எது?

..................................................................................................................

B. மண் மாதிரியொன்றின் பரமாணங்களை அவதானிக்க மாணவனொருவனுக்கு வழங்கப்பட்ட தரவுகள் பின்வருமாறு

| | |
|---|---|
| ஈரலிப்புக் காரணி | = 1.325 |
| குழம்பாத மண்ணுடன் கூடிய உருளையின் திணிவு | = 510g |
| கல்வனைசுக் குழாயின் உயரம் | = 4cm |
| கல்வனைசுக் குழாயின் விட்டம் | = 7cm |

i. தரப்பட்ட மண் மாதிரியின் உலர் திணிவைக் கணிக்க

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

ii. மண் கொண்ட உருளையின் கனவளவைக் காண்க.

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

iii. மண்ணின் தோற்றவடர்த்தியைக் காண்க.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

C. i. வெற்றிகரமான பயிர்ச் செய்கையில் செல்வாக்கு செலுத்தும் மண்ணின் பௌதிக இயல்புகள் 3 குறிப்பிடுக.

1. ..........................................................................................................................................
2. ..........................................................................................................................................
3. ..........................................................................................................................................

ii. மண்ணில் காணப்படும் பருமன் அடிப்படையிலான மண்வாழ் அங்கிகள் 3 வகை குறிப்பிடுக.

1. ..........................................................................................................................................
2. ..........................................................................................................................................
3. ..........................................................................................................................................

iii. மண்வாழ் அங்கிகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக் கூடிய விவசாய ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த உற்பத்திகள் 3 தருக.

1. ..........................................................................................................................................
2. ..........................................................................................................................................
3. ..........................................................................................................................................

D. i. பயன்பாட்டின் போது சேர்க்கப்படும் பல்வேறு பொருட்களும் சக்திகளாலும் நீரின் அமைப்பு மாற்ற மடைவதால் அந்நீரானது கழிவு நீர் எனப்படும். அக்கழிவுரை வகைப்படுத்தப்படும் மூன்று வகையும் எவை?

1. ..........................................................................................................................................
2. ..........................................................................................................................................
3. ..........................................................................................................................................

02. A. படத்தில் காட்டப்பட்ட எளிய சூரிய இனப்பெருக்கி கட்டமைப்பை பயன்படுத்தி வினைதிறனாக புதிய தாவரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

i இக்கட்டமைப்பை பயன்படுத்தி புதிய தாவரங்களை பெற்றுக் கொள்வதில் செல்வாக்கு செலுத்தும் இரு காரணிகளை தருக.

1. ..........................................................................................................
2. ..........................................................................................................

ii. அதற்காக பயன்படுத்தும் ஊடகத்தை குறிப்பிடுக

..........................................................................................................

..........................................................................................................

iii. A யை தயார்செய்யும் போது எதனைப் பற்றி அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயம் எது?.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................



B. பதிய அப்பிள் பழமொன்றை இரண்டாக வெட்டி சிறிது நேரத்தில் அவதானிக்கும் நிறம் மங்குவதற்கான இரசாயன தாக்கத்தை முன் வைக்க.

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

C. i. பின்வரும் உணவுகளில் காணப்படும் நீர்ச் செயற்பாட்டு பெறுமானங்களின்படி ஏறுவரிசையில் தருக.

பால் (A), பிஸ்கட் (B), இறைச்சி (C), உலர்திராட்சை (D)

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

ii. தற்காலத்தில் பாலுற்பத்தி விவசாயிகள் பாலுடன் கலக்கும் பதார்த்தம ஒன்றையும் அதன் நோக்கத்தையும் தருக.

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

D. நிலத் தயார்படுத்தலானது உயர் விளைச்சலைப் பெறும் நோக்குடன் செய்யப்படும் முன் விவசாய நடவடிக்கையாகும்.

i. நிலப் பண்படுதலின் மூலம் பயிர்ச் செய்கைக்கு ஏற்படும் நன்மைகள் 3 குறிப்பிடுக.

1. .......................................................................................................................................................

2. .......................................................................................................................................................

3. .......................................................................................................................................................

ii. பூச்சிய நிலப்பண்படுத்தலானது இழிவு பண்படுத்தலில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது.

.................................................................................................................................................................

E. i. அலங்கார வளர்ப்பு மீன்களை கொண்டு செல்லலிற்கு ஆயத்தப்படுத்த வேண்டிய முறையை மூன்று படிகளில் தருக.

1. .......................................................................................................................................................

2. .......................................................................................................................................................

3. .......................................................................................................................................................

ii. உணவிற்காக மீன் வளர்க்கும் போது தேவையான மீன்குஞ்சுகளைப்பெற இனப்பெருக்கல் நிலையங்கள் பயன்படுத்தப்படும். இங்கு மீன்கள் இனப்பெருக்கஞ் செய்யப்படும் இரு முகைளைத் தருக.

1. .......................................................................................................................................................

2. .......................................................................................................................................................

iii. மீன்களுக்கு செயற்கை உணவுகளை வழங்குகையில் அவ்வுணவில் காணப்பட வேண்டிய பண்புகள் 02 குறிப்பிடுக.

1. .......................................................................................................................................................

2. .......................................................................................................................................................

F. i. கழிவு நீரை பரிகரிக்கும் பிரதான இரண்டு முறைகளைத் தருக.

1. ..........................................................................................................................................................................

2. ..........................................................................................................................................................................

03. A. அறுவடைக்குப் பின்னரான இழப்புகளைத் தவிர்க்க உரிய முதிர்ச்சிப் பருவத்தில் அறுவடை செய்வது முக்கியமானது. அதற்காக பயிரின் வளர்ச்சி வீதம் காலத்துடன் அடையும் மாற்றத்தைக் காட்டும் வரைபு கீழே தரப்பட்டுள்ளது.




i. A, B க்களை பெயரிடுக.

A. ............................................................................

B. ..............................................................................

ii. பின்வரும் பயிர்களை அறுவடை செய்ய உகந்த முதிர்ச்சி பருவங்களைத் தருக.

1. தக்காளி ..............................................................................................................................................

2. மா ..............................................................................................................................................

3. வெண்டிக்காய் ..............................................................................................................................

B. i. மீனவர்களால் மேற்கொள்ளப்படும் பிழையான கையாளல் செயற்பாடுகள் 3 தருக.

1. ..........................................................................................................................................................................

2. ..........................................................................................................................................................................

3. ..........................................................................................................................................................................

C. i. காட்டப்பட்ட பாதுகாப்பு கட்டமைப்பு மிகப் பொருத்தமான விவசாய காலநிலை வலயத்தைப் பெயரிடுக.



..................................................................



...........................................................

ii. பாதுகாப்பில்லங்களில் செயற்கையாக மகரந்தச் சேர்க்கை செய்யக்கூடிய முறைகள் 3 தருக.

1. ..........................................................................................................................................................................

2. ..........................................................................................................................................................................

3. ..........................................................................................................................................................................

D. மாணவர்க்குழு ஒன்று மழைநீர் வடிந்தோடுவதற்கு நிர்மாணித்த வடிகால் தொடர்பாக அளவை மேற்கொண்டு பெறப்பட்ட தரவுகள் பின்வருமாறு

| புள்ளி | தூரம்(m) | பிற்பார்வை (m) (BS) | முற்பார்வை (m)(FS) | உயர்வு | வீழ்ச்சி | குத்துயரம் (m) |
|---|---|---|---|---|---|---|
| BM | | 3.03 | | | | 100 |
| $TP_1$ | 50 | 2.6 | 3.86 | ................ | ................ | ................ |
